SRI LANKA

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – ஜனவரி 2026

## (Level III Examination – January 2026)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## (304) கூட்டு நிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் III பரீட்சை – ஜனவரி 2026

## (304) கூட்டு நிறுவன மற்றும் தனிநபர் வரியியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(மொத்தம் 20 புள்ளிகள்)** **பகுதி A**

## *வினா 1 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 01 - இலங்கையின் வரியியலுக்கான அறிமுகம்***

**(a)**

உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 69 (4) இன் படி, ஒரு கம்பனியானது பின்வரும் சூழ்நிலையில், அது குறித்த வரி மதிப்பீட்டு ஆண்டிற்கு வதிவுள்ளதாகக் கருதப்படும்:

- அது இலங்கையின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் அல்லது உருவாக்கப்பட்டிருத்தல்
- அது இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் அல்லது அதன் பிரதான அலுவலகம் இலங்கையில் காணப்படுதல், அல்லது
- ஆண்டில் எந்தவொரு காலப்பகுதியிலும் கம்பனியின் முகாமை அல்லது கட்டுப்பாட்டு அம்சங்கள் இலங்கையில் செயற்படுத்தப்பட்டிருத்தல்.

கிரிசுது (தனியார்) வரையறுத்த கம்பனி, இலங்கையின் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருப்பதால், அது **இலங்கையில் வதிவுள்ள கம்பனி** ஆகும். இலங்கையின் வருமான வரிச் சட்டத்தின் கீழ், மேற்கூறிய பிரமாணங்களில் ஏதேனும் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருப்பின் குறித்த கம்பனி ஒரு வதிவுள்ள கம்பனி ஆகும். எனவே, கிரிசுது (தனியார்) வரையறுத்த கம்பனியானது அதன் உலகளாவிய வருமானத்திற்காக இலங்கையில் வரி விதிக்கப்படும்.

***(03 புள்ளிகள்)***

**(b)**

- பெறுமதி சேர்த்த வரி
- மதுவரி (கலால் வரி)
- சுங்கத் தீர்வை
- சமூக பாதுகாப்பு பங்களிப்புக் கட்டணம்
- முத்திரைத் தீர்வை
- செஸ்
- விசேட பண்ட வரி
- துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 05 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 2 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 06 – நிறுத்திவைத்த வரி மற்றும் மூலதன ஆதாய வரி மற்றும் வரிவிதிப்பு தொடர்பான வழக்குச் சட்டங்கள்***

| | **வதிவிட இல்லம்** | **இறப்பர் தோட்டம்** | **வெற்றுக் காணி** |
|---|---|---|---|
| பெறப்பட்ட பிரதிபயன் | 13,500,000 | | 16,470,000 |
| **(-) சொத்தின் கிரயம்** | | | |
| 30/09/2017 அன்று உள்ளவாறு, சீர்மதிப்பு அல்லது கையகப்படுத்தல் கிரயம் | (10,000,000) | முதலீட்டு சொத்து அல்ல | (11,850,000) |
| தரகர் கட்டணம் | (1,350,000) | | (1,947,000) |
| மூலதன ஆதாயம் | **2,150,000** | | **2,673,000** |

| | | |
|---|---|---|
| வதிவிட இல்லம் 2010 முதல் பயன்படுத்தப்பட்டது (பரம்பரையாகப் பெறப்பட்டது) | விலக்கு அளிக்கப்பட்டது | பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால், ஒரு தனிநபரின் பிரதான வசிப்பிடத்தை முடிவுறுத்துவதால் ஏற்படும் மூலதன ஆதாயம் மூலதன ஆதாய வரியிலிருந்து (CGT) விலக்கு அளிக்கப்படும்:<br>1. சொத்து முடிவுறுத்தப்படுத்துவதற்கு உடனடி முன்னைய காலத்தில் குறைந்தது 3 ஆண்டுகளுக்கு தொடர்ந்து சொந்தமாகக் காணப்பட்டிருத்தல் வேண்டும்.<br>2. தனிநபர் அந்த 3 ஆண்டுகளில் நாளாந்த அடிப்படையில் கணக்கிடப்பட்ட வகையில், குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஆதனத்தில் வசித்திருக்க வேண்டும். |
| இறப்பர் தோட்டம் (இறப்பர் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்) | | முதலீட்டு சொத்து அல்ல<br>(இறப்பர் தோட்டத்தினை முடிவுறுத்துவது என்பது இறப்பர் வருமானத்தைப் பெற்ற முதலீட்டு சொத்து அல்ல. எனவே மூலதன ஆதாய வரிக்கு உட்பட்டது அல்ல) |

மாத்தளையில் அமைந்துள்ள வெற்றுக் காணி (2014 இல் கொள்வனவு செய்யப்பட்டது)

ரூபா.2,673,000 ×10% = ரூபா.267,300

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

SRI LANKA

## *வினா 3 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 06 – நிறுத்திவைத்த வரி மற்றும் மூலதன ஆதாய வரி மற்றும் வரியியல் தொடர்பான வழக்குச் சட்டங்கள்***

X & Co. என்பது அர்ஜுன் மற்றும் பிரியால் ஆகியோரிடையே இலாபங்களைச் சமமாகப் பகிரம் (தலா 50%) ஒரு பங்குடமை ஆகும். அர்ஜுனின் இலாபத்தில் சமீர 25% பெறும் உரித்தை வழங்கும் வகையில் அர்ஜுன் சமீராவுடன் ஒரு பிறிதான உப பங்குடமை பங்குடமை ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் பிரியாலின் பங்கைப் பாதிக்காது.

இந்த ஏற்பாட்டின் வரி தாக்கங்களை A. A. தாவூத்பாய் எதிர் உள்நாட்டு இறைவரி ஆணையர் நாயகம் வழக்கைக் குறிப்பிடுவதன் மூலம் விளக்கலாம்.

இந்த வழக்கில், உப-பங்குடமை ஒப்பந்தத்தின் கீழ் பகிரப்படும் வருமானம் அசல் பங்காளரின் வரிவிதி வருமானத்தைக் குறைக்குமா என்பதை நீதிமன்றம் கருத்திற் கொண்டது. மற்றொரு பங்குடமையின் இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளத்தக்க எந்தவொரு பங்குடமையும் சட்டத்தின்பால் செல்லுபடியானதாகும். ஒரு பங்குடமையிலிருந்து வரும் வருமானம் முதலில் அதற்கு சட்டப்பூர்வமாக உரிமை உள்ள பங்காளரின் கைகளில் மதிப்பிடப்படும் என்று நீதிமன்றம் கூறியது. அத்தகைய வருமானத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தனியான ஒப்பந்தம் வருமானத்தை அதன் மூலத்திலிருந்து திருப்பிவிடுவதற்குச் சமமாகாது. அதற்கு பதிலாக, அது திரட்டப்பட்ட பிறகு வருமானத்தின் பயன்பாடாகக் கருதப்படுகிறது.

தற்போதைய வழக்கில், X & Co. வின் இலாபம் முதலில் பிரதான பங்குடமை ஒப்பந்தத்தின் கீழ் 50% அளவிற்கு அர்ஜுனுக்குச் சேரும். அர்ஜுனுக்கும் சமீரவுக்கும் இடையிலான உப-பங்குடமை ஒப்பந்தம் வெறும் ஒரு தனியார் ஏற்பாடாகக் காணப்படுவதுடன், சமீர X & Co வின் பங்காளர் அல்ல. எனவே, முதலில் வருமானம் சட்டப்பூர்வமாக அர்ஜுனுக்குச் சொந்தமானது. அவரது பங்கில் 25% இனை சமீரவுக்கு செலுத்துவது வெறுமனே அதன் பெற்றதன் பிறகு மேற்கொள்ளப்படும் வருமானத்தின் பிரயோகமாகும். **அதன்படி, அர்ஜுன் மீது அவரது முழுமையான 50% பங்கிற்கும் வரி விதிக்கப்படுவதுடன், சமீரவுக்கு செலுத்தப்படும் 25% வரி நோக்கங்களுக்காக விலக்கு அளிக்கப்படாது. உப-பங்குடமை மூலம் பெறப்பட்ட வருமானத்திற்காக சமீர மீது தனியாக வரி விதிக்கப்படும் அதே நேரத்தில் பிரியாலுக்கு X & Co விலிருந்து கிடைக்கும் இலாபத்தில் 50% பங்கின் மீது வரி விதிக்கப்படும்.** எனவே, A. A. தாவூத்பாய் எதிர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் வழக்கில் நிறுவப்பட்ட தத்துவத்தைப் பின்பற்றி, உப-பங்குடமை அர்ஜுனின் வரி விதிக்கக்கூடிய வருமானத்தைக் குறைக்காது.

***(05 புள்ளிகள்)***

## வினா 4 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

*அத்தியாயம் 07- பிற வரிகள்*

**(A)**

| மில்லினியம் ஹோட்டல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்<br>மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான<br>செலுத்த வேண்டிய சுற்றுலா அபிவிருத்தி வரி | |
|---|---|
| | **(ரூபா.)** |
| அறைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 1,650,000 |
| உணவு மற்றும் குடிபானங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் | 2,758,000 |
| ஸ்பா மூலம் பெறப்பட்ட வருமானம் | 876,500 |
| **மொத்த வருமானம் (சேவை வருமானம் தவிர்த்து)** | **5,284,500** |
| | |
| **சுற்றுலா அபிவிருத்தி வரி (TDL) @ 1%** | **52,845** |

*(03 புள்ளிகள்)*

**(B)**

விற்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை = 10,000

பங்கொன்றுக்கு விற்பனை விலை = ரூ. 35

பரிவர்த்தனையின் பெறுமதி = ரூ. 350,000

XYZ லிமிடெட் செலுத்த வேண்டிய பங்குப் பரிவர்த்தனை வரி,

350,000×0.3%=350,000×0.003 = ரூபா.1,050/-

SRI LANKA

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 05 புள்ளிகள்)*

*பகுதி A முடிவு*

| *(மொத்தம் 30 புள்ளிகள்)* | **பகுதி B** |
|---|---|

## *வினா 5ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 07 – பிற வரிகள்***

**DGB (Pvt) Ltd.**
**மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான**
**பெறுமதிசேர் வரிப் பொறுப்பின் கணிப்பீடு**

| | **வழங்கலின் பெறுமதி வீதம் (%)** | **பெ.சே.வரி** | **வழங்கலின் பெறுமதி வீதம் (%)** |
|---|---|---|---|
| **<u>வெளியீட்டின் மீதான பெ.சே.வரி</u>** | | | |
| உள்நாட்டு விற்பனை | 36,672,000 | 18% | 6,600,960 |
| ஏற்றுமதி விற்பனை | 5,254,000 | 0% | - |
| பெற்ற வாடகை வருமானம் | 225,000 | 18% | 40,500 |
| மோட்டார் லொறி முடிவுறுத்தல் | 3,540,000 | 18% | 637,200 |
| **மொத்த வெளியீட்டின் மீதான பெ.சே.வரி** | | | **7,278,660** |
| **உள்ளீட்டின் மீதான பெ.சே.வரி** | | | |
| மூலப்பொருட்கள் இறக்குமதி மீது | | 2,423,000 | |
| உள்நாட்டுக் கொள்வனவுகள் மீது | | 1,473,000 | |
| இயக்குநரால் பயன்படுத்தப்படும் மோட்டார் கார் பழுதுபார்ப்புகள் மீது | | அனுமதிக்கப் படவில்லை | |
| அனுமதிக்கக்கூடிய உள்ளீட்டின் மீதான பெ.சே.வரி | | **3,896,000** | |
| மு.கொ. வ: உறிஞ்சப்படாத உள்ளீட்டு வரி | | 524,520 | |
| **மொத்த அனுமதிக்கப்பட்ட உள்ளீட்டின் மீதான பெ.சே.வரி** | | | **(4,420,520)** |
| **செலுத்த வேண்டிய பெ.சே.வரி** | | | **2,858,140** |
| **கழிக்க:** | | | |
| செலுத்தப்பட்ட மாதாந்தத் தவணைக் கட்டணங்கள் | | | (1,500,000) |
| **செலுத்த வேண்டிய மீதி பெ.சே.வரி** | | | **1,358,140** |

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## வினா 6 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

*அத்தியாயம் 04 - இதர நிறுவனங்களின் வரிவிதிப்பு*

| "Event Planners" பங்குடமை<br>2024/25 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிப் பொறுப்பின் கணிப்பீடு (ரூபா.) | | | |
|---|---|---|---|
| | குறிப்பு | (+) | (-) |
| வரிக்கு முன்னரான நிகர இலாபம் | | 16,450,000 | |
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி (மொத்தம்) | | | 250,000 |
| **பங்காளர் சம்பளம் - அனுமதிக்கப்படவில்லை** | | | |
| - ருவான் | | 2,400,000 | |
| - மது | | 3,600,000 | |
| விநியோக வாகன வாடகை | | அனுமதிக்கப்படும் | |
| மதுவின் மகனின் சம்பளம் - முகாமையாளருக்கான சம்பளம் அனுமதிக்கப்படுகிறது | | அனுமதிக்கப்படும் | |
| நன்கொடை | | 300,000 | |
| கணக்கீட்டுப் பெறுமானத் தேய்வு | | 100,000 | |
| மூலதன விடுதொகை | | | 200,000 |
| | | **22,850,000** | **450,000** |
| | | | |
| **பங்குடமையின் வணிக வருமானம்** | | **22,400,000** | |
| **கூட்டுக: முதலீட்டு வருமானம்** | | | |
| நிலையான வைப்புக்கள் மீதான வட்டி (மொத்தம்) | | 250,000 | |
| **பங்குடமையின் வரிமதி வருமானம்** | | **22,650,000** | |
| **<u>கழிக்க: பிரிவு. 52 – தகுதிகாண் கொடுப்பனவுகள் மற்றும் நிவாரணம்</u>** | | | |
| அரச மருத்துவமனைக்கு வழங்கிய நன்கொடை | | (300,000) | |
| **பங்குடமையின் வரிவிதி வருமானம்** | | **22,350,000** | |
| | | | |
| **<u>பங்குடமையின் வருமான வரிக் கணிப்பீடு</u>** | | | |
| முதல் 1,000,000 @ 0% | | | எதுவுமில்லை |
| மீதமுள்ள 21,350,000 @ 6% | | | 1,281,000 |
| **செலுத்த வேண்டிய மொத்த வரி** | | | **1,281,000** |

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## வினா 7 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

*அத்தியாயம் 05 – கடமைகள் மற்றும் நடைமுறைகள்*

**(A)**

**(a)** 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 93 இன் படி, வருமான வரி வசூலிக்கப்படத்தக்க ஒவ்வொரு நபரும் மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் நவம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக வருமானத் திரட்டை சமர்ப்பித்தல் வேண்டும். எனவே, மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரித் திரட்டை நவம்பர் 30, 2025 அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

***(02 புள்ளிகள்)***

**(b)** பின்வருவனவற்றில் எது உயர்வானதோ, அது:

- செலுத்தவேண்டியுள்ள வரியில் 5%, அத்துடன் சமர்ப்பிக்கத் தவறுதல் தொடரும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது ஒரு மாதத்தின் பகுதிக்கும் மேலதிக 1%, மற்றும்
- ரூபா 50,000, அத்துடன், சமர்ப்பிக்கத் தவறுதல் தொடரும் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது ஒரு மாதத்தின் ஒரு பகுதிக்கும் ரூ. 10,000.

எனினும், அபராதங்கள் ரூ. 400,000 ஐ விட அதிகமாக இருத்தலாகாது.

*(03 புள்ளிகள்)*

**(B)**

**(a)**

**(i)** 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 135 (2)(b) ஏற்பாடுகளின் பிரகாரம்,

- சுய மதிப்பீடொன்றிற்கு, சுய மதிப்பீட்டு வரி செலுத்துவோர் சுய மதிப்பீட்டு அறிக்கையை சமர்ப்பித்த திகதியிலிருந்து முப்பது மாதங்களுக்குள்.

**(ii)** 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 135 (2)(a) ஏற்பாடுகளின் பிரகாரம், மோசடி அல்லது முழுமையாகத் தெரிந்தே புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், எந்த நேரத்திலும் திருத்தப்பட்ட அல்லது மேலதிக மதிப்பீடு வழங்கப்படலாம்.

*(03 புள்ளிகள்)*

**(b)**

- மதிப்பிடப்பட்ட வரி
- மதிப்பிடப்பட்ட அபராதம்
- வரிக் காலம்
- வரி மற்றும் அபராதம் செலுத்த வேண்டிய கடைசி தேதி
- மதிப்பீட்டை ஆட்சேபிக்கும் விதம்

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

*பகுதி B முடிவு*

*(மொத்தம் 50 புள்ளிகள்)* **பகுதி C**

## *வினா 8 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

***அத்தியாயம் 03 - தனிநபர்கள் மற்றும் கம்பனிகள் மீதான வரிவிதிப்பு***

**கிரிஸ்டல் பீவரேஜஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**2024/25 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான**
**வருமான வரிப் பொறுப்பின் கணிப்பீடு**

(ரூபா.000)

| | | |
|---|---|---|
| வியாபார வருமானம் **(குறிப்பு 01)** | | 13,410 |
| **முதலீட்டு வருமானம்** | | |
| வட்டி வருமானம் - நிலையான வைப்பு | | 8,950 |
| வாடகை வருமானம் | | 16,940 |
| **மொத்த வரிமதி வருமானம்** | | **39,300** |
| கழிக்க: தகுதிகாண் கொடுப்பனவு மற்றும் நிவாரணம் US $52 | | |
| பொருட்கள்: பிரதேச சபைக்கு நன்கொடை | | (500) |
| **வரிவிதி வருமானம்** | | **38,800** |
| **30% வரி பொறுப்பு** | | 11,640 |
| **வரி வரவுகள்** | | |
| செலுத்தப்பட்ட சுய மதிப்பீட்டுக் கொடுப்பனவுகள் | | (6,500) |
| நிலையான வைப்புக்கள் மீதான WHT (8,950,000*5%) | | (447.5) |
| வாடகை மீதான AIT (16,940,000*10%) | | (1,694) |
| **மீதி செலுத்த வேண்டிய வருமான வரி** | | **2,998.5** |

**குறிப்பு 01 – வியாபாரம் / வணிகத்தில் இருந்தான வரிமதி வருமானக் கணிப்பீடு**

| | | |
|---|---|---|
| | (ரூபா.000) | (ரூபா.000) |
| | **+** | **-** |
| வரிக்கு முன்னரான நிகர இலாபம் (நட்டம்) | 32,600,000 | |
| **கழிக்க: முதலீட்டு வருமானம்** | | |
| நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் - முதலீட்டு வருமான வரி தனியாக | | 8,950,000 |
| வாடகை வருமானம் - முதலீட்டு வருமான வரி தனியாக | | 16,940,000 |
| **கூட்டுக / கழிக்க:** | | |
| ஏட்டுப் பெறுமானத் தேய்வு - அனுமதிக்கப்படவில்லை U.S 10 | 8,870,000 | |
| பணிக்கொடை ஏற்பாடு | 2,500,000 | |
| பொழுதுபோக்கு - வாடிக்கையாளர் வரவேற்பு – வருமானத்தை உருவாக்கும் நோக்கில் செலவிடப்பட்டது – அனுமதிக்கப்படும் | - | |
| பொழுதுபோக்கு - வருடாந்த சுற்றுலா - அனுமதிக்கப்படவில்லை, வருமான உருவாக்கத்திற்காக செலவிடப்படவில்லை. | 450,000 | |
| வெளிநாட்டுப் பயணம் - அனுமதிக்கப்படும் - வருமான உருவாக்கத்திற்காக செலவிடப்பட்டது | - | |
| சொத்து முடிவுறுத்தல் நட்டம் | 150,000 | |

SRI LANKA

| | | |
|---|---|---|
| அறவிட முடியாக் கடன் பதிவழிப்பு - அனுமதிக்கப்பட்டது - | - | |
| ஐயக்கடன் ஏற்பாடு | 95,000 | |
| வர்த்தக நாமம் பதிவு - மூலதன இயல்பு - அனுமதிக்கப்படவில்லை | 200,000 | |
| பிற சட்ட மற்றும் தொழில்முறை கட்டணங்கள் - அனுமதிக்கப்படும் | - | |
| அபராதங்கள் மற்றும் தண்டப்பணம் - தாமதமாக வருமானத் திரட்டு சமர்ப்பித்தமை - அனுமதிக்கப்படவில்லை | 120,000 | |
| நன்கொடை | 500,000 | |
| **மூலதன விடுதொகைகள்** | | |
| **ஆண்டுக் காலத்தின் போதான சேர்ப்பனவுகள்** | | |
| பொறி மற்றும் இயந்திரங்கள் - 4,500,000, 5 ஆண்டுகளுக்கு | | 900,000 |
| கட்டடம் - 1,500,000, 20 ஆண்டுகளுக்கு | | 75,000 |
| **முன்னைய ஆண்டுகள்** | | |
| நிலம் - அனுமதிக்கப்படவில்லை | | - |
| அலுவலக கட்டடம் - 15,000,000, 20 ஆண்டுகளுக்கு | | 750,000 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் - 7,000, 000, 5 ஆண்டுகளுக்கு | | 1,400,000 |
| மோட்டார் வாகனம் -18,600,000 - (6,000,000 - 3,200,000), 5 ஆண்டுகளுக்கு | | 1,880,000 |
| முகாமைப் பணிப்பாளரின் கார் - விடுதொகை கோர முடியாது. | | - |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் - 2,800,000, 5 ஆண்டுகளுக்கு | | 560,000 |
| சொத்து முடிவுறுத்தலுக்கான சமப்படுத்தல் விடுதொகை அல்லது மதிப்பிடத்தக்க கட்டணங்கள் | | |
| பிரதிபயன்: 2,850,000 | | |
| **கழிக்க: கிரயம் 3,200,000** | | |
| கோரப்பட்ட தேய்மான விடுதொகைகள் (3,200,000/5 x 2) - 1,280,000 | | |
| வரிக்கான குறைத்தெழுதிய பெறுமதி = 3,200,000 - 1,280,000 = 1,920,000 | | |
| சொத்து முடிவுறுத்தலுக்கான மதிப்பிடத்தக்க கட்டணம் (2,850,000 - 1,920,000) | 930,000 | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | 900,000 |
| | 46,415,000 | 32,355,000 |
| **வணிகம் வருமானம் - வணிக நட்டம் சீராக்கப்பட முன்னர்** | | **14,060,000** |
| கழிக்க: மு. கொ. வ. வணிக நட்டம் | (650,000) | |
| | | **13,410,000** |

***(25 புள்ளிகள்)***

## வினா 9 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 03 – தனிநபர்கள் மற்றும் கம்பனிகள் மீதான வரிவிதிப்பு**

| திரு. மேவன்<br>2024/25 மதிப்பீட்டு ஆண்டுக்கான<br>வருமான வரிக் கணிப்பீடு (ரூபா.) | | |
|---|---|---|
| வேலைவாய்ப்பு மூலமான வரிமதி வருமானம் | குறிப்பு 1 | 8,700,000 |
| வியாபாரம் மூலமான வரிமதி வருமானம் | குறிப்பு 2 | 3,930,000 |
| முதலீட்டின் மூலமான வரிமதி வருமானம் | குறிப்பு 3 | 2,700,000 |
| **(a) மொத்த வரிமதி வருமானம்** | | **15,330,000** |
| கழிக்க: பிரிவு. 52 – தகுதிகாண் கொடுப்பனவு மற்றும் நிவாரணங்கள் | குறிப்பு 4 | (1,825,000) |
| **(b)** வரிவிதி வருமானம் | | **13,505,000** |
| **(c)** செலுத்த வேண்டிய மொத்த வரி | குறிப்பு 5 | **4,411,800** |
| **<u>கழிக்க: வரி வரவுகள்</u>** | | |
| செலுத்தப்பட்ட APIT | (2,250,000) | |
| செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்கள் | (900,000) | |
| வட்டி மீதான AIT @ 5% | (40,000) | (3,190,000) |
| **(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி** | | **1,221,800** |

**குறிப்பு 01 - வேலைவாய்ப்பின் மூலமான வரிமதி வருமானம் (ரூபா.)**

| | |
|---|---|
| மொத்த சம்பளம் (560,000 x12) | 6,720,000 |
| வாகன நன்மை (20,000 + 20,000) * 12 | 480,000 |
| மருத்துவமனைக் கொடுப்பனவு நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் சம விதிமுறைகளில் கிடைக்கும்) | வரிக்குப் பொறுப்பல்ல |
| வெளிநாட்டு சுற்றுலா செலவு மீளளிப்பு - தனிப்பட்ட பயணம் | 960,000 |
| தொழில்தருனரால் வழங்கப்பட்ட வதிவிடம் (90,000 * 12) * 50% | 540,000 |
| **வேலைவாய்ப்பின் மூலமான வரிமதி வருமானம்** | **8,700,000** |

**குறிப்பு 02 – வியாபாரம் மூலமான வரிமதி வருமானம் (ரூபா.)**

| | (+) | (-) |
|---|---|---|
| வரிக்கு முன்னரான நிகர இலாபம் | 3,700,000 | - |
| அச்சிடுதல் மற்றும் காகிதாதி | அனுமதிக்கப்படும் | - |
| அலுவலக வாடகை | அனுமதிக்கப்படும் | - |
| மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணங்கள் | அனுமதிக்கப்படும் | - |
| வங்கி கடன் வட்டி (தனிப்பட்ட பயன்பாடு) - அனுமதிக்கப்படவில்லை | 230,000 | - |
| **வியாபாரத்தின் மூலமான வரிமதி வருமானம்** | **3,930,000** | |

**குறிப்பு 03 - முதலீட்டின் மூலமான வரிமதி வருமானம் (ரூபா.)**

| | | |
|---|---|---|
| **<u>மொத்த வட்டி வருமானம்</u>** | | |
| திறைசேரி உண்டியல்கள் மீது | 1,000,000 | |
| நிலையான வைப்புக்கள் மீது | 800,000 | 1,800,000 |
| நிரற்படுத்திய பங்குகளின் விற்பனை இலாபம் | விலக்கு | - |
| பங்கிலாப வருமானம் - பெற்ற பங்கிலாபங்களில் இருந்து செலுத்தப்பட்டது | விலக்கு | - |
| **வாடகை வருமானம்** | | |
| மொத்த வாடகை வருமானம் (75,000 * 12) | 900,000 | |
| (-) குடியிருப்பாளரால் செலுத்தப்பட்ட இறைகள் | அனுமதிக்கப் படவில்லை | 900,000 |
| **முதலீட்டின் மூலமான வரிமதி வருமானம்** | | **2,700,000** |

**குறிப்பு 04 - பிரிவு. 52 – தகுதிகாண் கொடுப்பனவு மற்றும் நிவாரணங்கள்**

| | |
|---|---|
| தனிப்பட்ட வரி நிவாரணம் | 1,200,000 |
| மொத்த வாடகை வருமானத்தில் 25% விடுதொகை (900,000 x 25%) | 225,000 |
| இலங்கையின் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்திற்கு புத்தக நன்கொடை | 400,000 |
| | **1,825,000** |

aat SRI LANKA

**குறிப்பு 05 - மொத்த வரிப் பொறுப்பு**

| | |
|---|---|
| முதலாவது 500,000 x 6% | 30,000 |
| அடுத்த 500,000 x 12% | 60,000 |
| அடுத்த 500,000 x 18% | 90,000 |
| அடுத்த 500,000 x 24% | 120,000 |
| அடுத்த 500,000 x 30% | 150,000 |
| மீதமுள்ள தொகைக்கு (13,505,000-2,500,000) x 36% | 3,961,800 |
| | **4,411,800** |

***(25 புள்ளிகள்)***

***பகுதி C முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*